# මැතිවරණ කොමිෂන් සභාව
## தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

*web : www.slelections.gov.lk* *e-mail : info@slelections.gov.lk*


මගේ අංකය : FE/101/2025 ඔබේ අංකය : දිනය : 2025.05. 08
எனது இல. உமது இல. திகதி

**පළාත් ආණ්ඩුකාරවරු,**
**පළාත් ප්‍රධාන ලේකම්වරු,**

**පළාත් පාලන ආයතන ඡන්ද විමසීම - 2025.05.06**

පසුගිය වසරේ පැවති ජනාධිපතිවරණයේ හා පාර්ලිමේන්තු මැතිවරණයේ රාජකාරි සඳහා සහභාගී වූ විදුහල්පතිවරුන් හා ගුරුවරුන්ගේ මැතිවරණ දීමනා ඔවුන් වෙත ලබාදීම බොහෝ ප්‍රමාද වූ අතර ඒ සම්බන්ධයෙන් දැඩි විවේචනයන්ට ලක්වීමට ද සිදුවිය.

02. එබැවින් මා විසින් නිකුත් කර ඇති 2025.05.08 දිනැති චක්‍රලේඛ අංක LAE/2025-76 හි 3.1 ඡේදයේ උපදෙස් පරිදි පළාත් සභා අක්මුදල්වලින් ගෙවීම් කර මැතිවරණ කොමිෂන් සභාව වෙතින් ප්‍රතිපූර්ණය කර ගැනීමට කටයුතු කර ගැනීම තුලින් මැතිවරණයට සහභාගී වූ නිලධාරින්ට ප්‍රමාදයකින් තොරව ගෙවීම් කිරීමට හැකියාවක් පවතින බැවින් ඊට අවශ්‍ය අක්මුදල් කඩිනමින් අදාල පළාත් සභා ආයතනයට ලබාදීමට අවශ්‍ය කටයුතු සලසන මෙන් කාරුණිකව ඉල්ලා සිටිමි.

**සමන් ශ්‍රී රත්නායක**
මැතිවරණ කොමසාරිස් ජනරාල්
මැතිවරණ කොමිෂන් සභාව

පිටපත්:- 01. නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් (මුදල්) - අවශ්‍ය කටයුතු සඳහා
02. දිස්ත්‍රික් නියෝජ්‍ය/ සහකාර මැතිවරණ කොමසාරිස්වරුන් - අවශ්‍ය කටයුතු සඳහා

சுற்றறிக்கை இலக்கம் :- **LAE/2025- 76**

எனது இலக்கம் :- FE/101/2025
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2025.05. 08

**அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,**
**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் ஏனைய நியதிச் சட்ட ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,**
**அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்/ மாவட்ட செயலாளர்கள்,**
**மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள் மற்றும் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,**
**அனைத்து கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தவிசாளர்கள்/ பொது முகாமையாளர்கள்,**

<u>உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2025.05.06</u>
<u>தேர்தல் பணியாட் குழுவினருக்கான கொடுப்பனவுகள்</u>

2025.05.06 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின்போது தேர்தல் கடமையில் ஈடுபட்ட பணியாட் குழுவினருக்குக் கொடுப்பனவு செய்ய முடியுமான கட்டணங்கள் மற்றும் அக்கொடுப்பனவுகளோடு தொடர்புடைய கணக்குகள் தொடர்பான நடைமுறைகள் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

**02.** தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை நன்கு பரிசீலித்துக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு உங்களது கணக்குகள் பணிக்குழுவினருக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும். இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் மீள்நிரப்புச் செய்யப்படமாட்டாதென்பதோடு, அத்தகைய கொடுப்பனவுகள் தொடர்பான முழுப் பொறுப்பினையும் கொடுப்பனவு செய்கின்ற அலுவலரே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

03. தேர்தல் பணியாட் குழுவினருக்குக் கொடுப்பனவை மேற்கொள்ளவேண்டிய நிலையங்கள் மற்றும் அந்நிலையங்களினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு பிரிவுகளாக வகையீடு செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவை மேற்கொள்கின்ற அலுவலர் அந்நிலையங்களையும் கொடுப்பனவுகளையும் தெளிவாக இனங்கண்டு அதற்கமைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

### 03.1 தமது நிரந்தர சேவை நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள்

(அ) மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் ஈடுபட்ட அரசாங்க அலுவலகங்கள்/ நிறுவனங்களின் நிரந்தரப் பணியாட் குழுவினருக்கும் ஏனைய உதவியாளர்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய தமது நிரந்தர சேவை நிலையத்தினூடாகப் படிகளையும் செலுத்த செய்ய முடியும். மேற்குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது தேர்தல் கடமைகளுக்காக முறையான பிரகாரம் வழங்கப்பட்ட நியமனக் கடிதம் மற்றும் கடமையில் ஈடுபட்டமைக்கான வரவுச் சான்றிதழ் கொடுப்பனவு வவுச்சருடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

i. வட்டாரத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக அல்லது வாக்கெடுப்பு பிரிவுகள்/ பிரதேச செயலகங்கள் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலகமொன்றின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக நடவடிக்கை மேற்கொள்ளல்.

ii. வாக்கெடுப்பு நிலையமொன்றில் அல்லது வாக்கெடுப்புப் பிரிவுகள்/ பிரதேச செயலகங்கள் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலகமொன்றின் (சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ மேலதிக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ கனிட்ட தலைமை தாங்கும் அலுவலரொருவராக, எழுதுநர் அல்லது அலுவலக உதவியாளராகப்) பணியாற்றியமை.

iii. வாக்குப்பெட்டிகள் விநியோகிக்கப்படுகின்ற மண்டபமொன்றில் வாக்குச்சீட்டுக்கள் மற்றும் வாக்குப்பெட்டிகள் ஆகியவற்றை விநியோகிக்கின்ற மற்றும் மீளக் கையேற்கின்ற பணிகளில் ஈடுபட்டமை.

iv. வாக்கெண்ணல் மண்டபமொன்றில் வாக்கெண்ணும் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் முடிவுகளை அட்டவணைப்படுத்துதல், முடிவுகளைத் தயாரித்தல் மற்றும் வெளியிடும் மண்டபமொன்றில் முடிவுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் வெளியிடும் பணிகளில் ஈடுபடல்.

(ஆ) கொடுப்பனவுக்குத் தேவையான பணி முற்பணத்தை பெற்றுக்கொள்ளல்

❖ மத்திய அரசின் நிறுவனங்கள்

ITMIS முறைமையூடாக பணி முற்பணம் விண்ணப்பிக்கின்ற நிறுவனங்கள் ITMIS முறைமையில் உட்படுத்தப்படுகின்ற சான்றுப்படுத்தப்பட்ட முற்பண வவுச்சர் மூலம் மற்றும் ITMIS முறைமை ஊடாக பணி முற்பணம் விண்ணப்பிக்காத நிறுவனங்கள் தமது வழமையான வழிமுறைகளினூடாக திறைசேரியிலிருந்து தேவையான பணி முற்பணத்தைப் பெற்றுக்கொண்டு கொடுப்பனவுகளைச் செய்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

❖ மாகாண சபைகள் மற்றும் அதற்குரிய நிறுவனங்கள்

மாகாண திறைசேரியிலிருந்து தேவையான பணி முற்பணத்தை பெற்றுக்கொண்டு கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.

❖ கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்

நிறுவனம் வசமுள்ள நிதியத்தின் மூலம் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

(இ) கொடுப்பனவு மீளளிப்புச் செய்தல்

மேற்குறித்தவாறு கொடுப்பனவு செய்த பின்னர் கொடுப்பனவு தொடர்பான விபரத்தை இச்சுற்றறிக்கையின் 10.1 மற்றும் 10.2 உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை சகிதம் மேற்படி முகவரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

குறித்த அட்டவணைகள் கிடைத்த பின்னர் கிழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தித் தீர்த்தல் வேண்டும்.

| | |
|---|---|
| i. மத்திய அரசின் நிறுவனங்கள் - | இதற்காக ஒதுக்கீடு வழங்கப்படுவதோடு ஒதுக்கீடு கிடைத்தவுடன் திறைசேரியிலிருந்து தேர்தல் கொடுப்பனவிற்காக பெறப்பட்ட சகல பணி முற்பணத்திற்கான முற்பணங்களைச் செலத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். |
| ii. மாகாண சபைகள் மற்றும் அதற்குரிய நிறுவனங்கள் - | குறித்த நிதி Sri Lanka Inter Bank Payment System (SLIPS) மூலம் குறித்த நிறுவனத்தின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு உடனடியாக மாகாண திறைசேரிக்கு கட்டு நிதியை செலுத்தித் தீர்த்தல் வேண்டும். |
| iii. கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் - | குறித்த நிதி Sri Lanka Inter Bank Payment System (SLIPS) மூலம் குறித்த நிறுவனத்தின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

03.2 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் சேவையிலீடுபட்ட பணியாட் குழுவினருக்கு அவர்கள் சேவையாற்றிய மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தினால் அவர்களுக்கான படிகள் கொடுப்பனவு செய்யப்படும்

I. நியமனக் கடிதங்கள்/ கோப்புகளை கையேற்பதற்கு முந்திய தினமொன்றில் சமூகமளித்தமை.

II. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய பூர்வாங்கப் பணிகளில் ஈடுபட்டமை.

III. நலனோம்பல்/ போக்குவரத்து/ மண்டபங்களைத் தயார்படுத்தல்/ பொது வசதிகள்/ ஒருங்கிணைப்பு குழுக்கள் போன்றவற்றில் சேவையாற்றியமை.

IV. பிரதேச செயலகங்களில் வாக்கெடுப்பு நிலைய பணியாட்குழு ஒதுக்குக் குழாம்களை பேணிவரும் பணிகளை மேற்கொள்ளும் பணியாட்குழுவுக்கு படிகளைச் செலுத்தல்.

V. சேவை எதிர்பார்ப்போடு காத்திருந்தமை (காத்திருப்பு சேவை)

VI. தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள்/ தேர்தல்கள் அலுவலகங்கள் என்பவற்றினால் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமென குறித்துரைக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள்.

VII. வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வாகனங்களை கொண்டு செல்கின்ற சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் மற்றும் அந்த வாகனச் சாரதியின் படிகளைச் செலுத்தல்.

VIII. மேற்குறித்த 03 ஆம் பந்தியின் 03.1 (அ) உப பந்தியின் கீழ் குறிப்பாகக் காட்டப்படாத ஏனைய தேர்தல் கடமைகளுக்கான கொடுப்பனவுகள்.

மேற்படி 03 ஆம் பகுதியில் 3.2 உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள (I) தொடக்கம் (VIII) வரையுள்ள பணிகளின் கீழான சேவைகளில் ஈடுபட்டுள்ள நிரந்தரப் பணியாட்குழு மற்றும் ஊழியர்களுக்கான தெரிவத்தாட்சி அலுவலர்/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் அறிவுறுத்தல் பிரகாரம் உரிய வவுச்சர் மற்றும் துணைக் காகிதாதிகளை முடியுமான கதியில் தான் பணியாற்றிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## 04. பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகள்

தேர்தல் கடமைக்கான நியமனக் கடிதமொன்றின் மூலமும் நியமனம் செய்யப்பட்ட பணியை ஆற்றியமைக்கான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலமும் உறுதிப்படுத்தப்படுமாயின் மேற்குறித்த 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் கடமைக்காக கீழே காட்டப்பட்டுள்ள விஷேட சந்தர்ப்பங்களையும் உள்ளடக்கிய வகையில், தாபன விதிக் கோவையின் **XIV** ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அலுவலர்களுக்கு உரித்துண்டு.

4.1 உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரொருவர் மேலதிக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரொருவர் கனிட்ட தலைமை தாங்கும் அலுவலரொருவர் வாக்கெடுப்பு நிலைய எழுதுநர் அல்லது அலுவலக உதவியாளரொருவராக தெரிவு செய்யப்பட்டுள்ள எவரேனும் அலுவலரொருவருக்கு கடமைக்காகச் செல்வதற்கு பயணம் ஆரம்பிக்கும் இடமாகக் கருதப்பட வேண்டியது அலுவலரின் சேவை நிலையமாகும். <u>சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவர் அழைத்துச் செல்கின்ற அரச அலுவலர் ஒருவரல்லாத அலுவலக உதவியாளர் ஒருவரின் கருதுகோள் சேவை நிலையமாகக் கருதப்பட வேண்டியது, சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் சேவை நிலையமாகும்.</u>

4.2 அலுவலர் தான் வதியும் வீட்டிலிருந்து பிரயாணத்தை ஆரம்பிப்பவராயின் அவரது வீடு அவரது சேவை நிலையத்திலிருந்து 24 கிலோ மீற்றர் தூரத்திற்குள் அமையப்பெற்றிருப்பின், அந்த வீட்டை அவரின் சேவை நிலையமாகக் கருதி கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்.

4.3 மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு முன்கூட்டியே அறிக்கையிடுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அவரால் தற்காலிகத் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். அவ்விடங்களில் தங்கியிருக்காமல் வேறோர் இடத்தில் தங்கியிருந்தால் அத்தகைய அலுவலரொருவருக்கு தங்கியிருப்பதற்கென நிர்ணயிக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து உச்சளவாக 07 கிலோமீற்றர் தூரத்திற்கு மாத்திரமே பிரயாணச் செலவினத்தைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

4.4 I. தேர்தல் கடமைக்கான அவசர அழைப்புக் காரணமாக மாவட்டத் தேர்தல் அலுவலகம் ஒன்றிற்கு குறுகிய காலத்திற்குள் அறிக்கையிட வேண்டியேற்படின் அத்தகைய சந்தர்ப்பமொன்றில் அலுவலர் ஒருவருக்கு குளிரூட்டப்பட்ட பஸ் வண்டியொன்றில் பிரயாணம் செய்யவேண்டி நேரிடலாம். அத்தகைய சந்தர்ப்பமொன்றில் பிரயாணத்திற்காக குளிரூட்டப்பட்ட பஸ் வண்டியினால் வழங்கப்பட்ட பிரயாணச்சீட்டை பிரயாணச் செலவு வவுச்சரோடு இணைத்து சமர்ப்பிப்பாராயின், குளிரூட்டப்பட்ட பஸ் வண்டிக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தை மீள்நிரப்புச் செய்ய முடியும்.

II. தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய மைல் கூலிக் கட்டணம் உரித்தான வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவருக்கு மாவட்டத்திற்குள் மாத்திரம் மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தியமைக்காக கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 2.00 வீதம் மைல் கூலியைக் கொடுப்பனவு செய்ய முடியுமென்பதோடு தேர்தல் கடமைக்காக தமது மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தியதை உறுதிப்படுத்துகின்ற ஆவணமொன்றை தான் சேவையாற்றிய தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து பெற்றுப் பிரயாணச் செலவு வவுச்சரோடு சமர்ப்பித்தல் வேண்டும்.

4.5 I. வாக்களிப்பு நிலையமொன்றின் வாக்களிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்குப் பணிக்கப்பட்ட அலுவலரொருவர் வாக்கெடுப்புக்கு முந்திய தின இரவை தமது வாக்களிப்பு நிலையத்தில் அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டுள்ள இடமொன்றில் தங்கியிருப்பதற்கு அறிவுறுத்தப்பட்டு உண்மையிலேயே அவ்விடத்தில் இரவைக் கழித்துமிருப்பாராயின் பிரயாணம் செய்த தூர அளவைக் கவனத்திற்கொள்ளாமல் தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத் தொகைக்கு ஏற்ப முழுமையான இணைந்த படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

II. வாக்களிப்பு நிலையத்தில் இரவைக் கழிக்காத ஒருவருக்குக்கூட பிரயாணம் செய்த தூரத்தின் அளவு 11.2 கிலோமீற்றரிலும்/ 7 மைலிலும் குறைவாகவிருக்கின்ற சந்தர்ப்பமொன்றில் தூர அளவைக் கவனத்திற்கொள்ளாமல் இணைந்த படியில் அரைவாசியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

4.6 வாக்கெண்ணல் பணிகளுக்காக வாக்கெண்ணும் நிலையமொன்றில் இரவு தரித்திருந்த அலுவலர்களுக்கு பிரயாணம் செய்த தூர அளவைக் கவனத்திற்கொள்ளாமல் அன்றைய தினத்திற்கு மாத்திரம் இணைந்த படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

4.7 தேர்தலுக்கு முந்திய தினமன்று வாக்குப்பெட்டிகளின் விநியோகப் பணிகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு அப்பணியை நிறைவு செய்து வீடுகளுக்குச் செல்வதற்கு கால அவகாசம் உண்டு. ஆதலால் அன்றைய தினம் அப்பணிகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு அப்பணியை மேற்கொண்ட நிலையம் அவரின் நிரந்தர சேவை நிலையம் அமையப்பெற்றுள்ள நகர எல்லைக்கு வெளியே அமையப்பெற்றிருப்பின் மற்றும் அக்கடமைகளில் ஈடுபட்ட நிலையம் இணைந்த படியைக் கொடுப்பனவு செய்வதற்காக தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள தூரத்தில் அமையப்பெற்றிருப்பின் மாத்திரமே இணைந்த படிகளைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

4.8 தேர்தல் கடமைக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரங்களிலேயே அலுவலர்கள் பிரயாணம் செய்தல் வேண்டும். இணைந்த படிகள் முழுமையாக இவ்வடிப்படையிலேயே கொடுப்பனவு செய்யப்படுமென்பதோடு அவ்வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள தினங்களல்லாத வேறு தினங்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகளுக்கான செலவினங்கள் மீள்நிரப்பு/ நிதி ஒதுக்கீடு செய்யப்பட மாட்டாது.

## 05. விஷேட பிரயாணக் கட்டணம் (மைல் கூலி)

5.1 போக்குவரத்துப் பணிகள் தொடர்பான 2025.03.31 ஆம் திகதிய LAE/2025-45 ஆம் இலக்க போக்குவரத்துச் சுற்றறிக்கையில் (அனைத்துப் போக்குவரத்து சுற்றறிக்கைகளினதும் பொழிப்புச் செய்யப்பட்ட பிரதான சுற்றறிக்கை) குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வறிவுறுத்தல்களுக்குப் புறம்பாக நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அதற்காக எனது விஷேட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.2 I. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்/ அவரால் போக்குவரத்துப் பணிகளுக்குப் பொறுப்பாகப் பணியாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பதவிநிலை அலுவலரொருவரின் முன்னனுமதியின் கீழ் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரொருவர் தமது வாக்களிப்பு நிலையத்திற்கான வாக்குப் பெட்டிகளாதியவற்றினை எடுத்துச்செல்லல் மற்றும் வாக்களிப்பின் பின்னர் அவற்றை மீள எடுத்து வருதல் என்பவற்றிற்காக தம்மால் எடுத்துவரப்பட்ட வாகனமொன்றைப் பயன்படுத்தியிருப்பின் இலக்கம்: LAE/2025-45 மற்றும் 2025.03.31 ஆம் திகதிய போக்குவரத்துச் சுற்றறிக்கையில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு பெற்றோல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூ.52.00 வீதமும், டீசல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூ. 47.00 வீதமும் தனிப்பட்ட வாகனங்களுக்கான பிரயாணக் கட்டணங்களைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

II. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் தன்னால் எடுத்துவரப்பட்ட வாகனத்தைச் செலுத்துவதற்காக ஈடுபடுத்திய அரசாங்க ஊழியரல்லாத தனிப்பட்ட சாரதியொருவருக்கு சம்பளமாக ஒரு நாளைக்கு ரூபா 2000.00 வீதம் செலுத்துவதற்கு முடியும். மேலும், 12 மணித்தியால சேவைக் காலமொன்றைப் பூர்த்திசெய்துள்ள சந்தர்ப்பங்களில் ரூ.700.00 வீதத்திலான இணைந்த படியையும் செலுத்துவதற்கு முடியும். இந்தப் படியைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற வவுச்சருடன் V-3 படிவத்தின் (சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரால் எடுத்துவரப்படுகின்ற தனிப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய படிவம்) பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். தனிப்பட்ட சாரதியின் படிகள் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரினால் சாரதிக்குக் கொடுப்பனவு செய்யப்பபட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அந்தத் தொகை சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் பெயரில் மீள்நிரப்புச் செய்யப்படும். அவ்வாறு மீள்நிரப்புச் செய்வதற்காக சாரதி தனது பணத்தைக் கையேற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கின்ற அத்தாட்சிப் பத்திரமொன்றை அல்லது கடிதமொன்றை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் வவுச்சரோடு இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

III. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரினால் எடுத்துவரப்படுகின்ற வாகனமொன்று தேர்தல் கடமைக்காக ஈடுபடுத்தப்படின் மாத்திரம் அந்த சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் பிரயாணச் செலவு விண்ணப்பம் மற்றும் தேர்தல் கடமைகளுக்கான ஏனைய வவுச்சர்கள், வரவுச் சான்றிதழ்கள் சகிதம் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

IV. வாக்களிப்பு நிலையக் கடமைகள் தவிர்ந்த வேறு தேர்தல் கடமைகளுக்காக பணியில் ஈடுபடுத்தப்பட்ட சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு தனிப்பட்ட வாகனமொன்றில் வந்தமைக்கு மைல் கூலி கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

5.3 I. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், அவரால் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகப் பணியாற்றுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்டுள்ள பதவிநிலை அலுவலரொருவரின் முன்னனுமதியின் கீழ் தலைமை வாக்கெண்ணும் அலுவலராக/ பிரதி தலைமை வாக்கெண்ணும் அலுவலராக, வாக்கெண்ணல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு தனிப்பட்ட வாகனத்தை அல்லது வாழ்க்கைத் துணையின் வாகனத்தைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்காக விஷேட காரணங்களின் கீழ் திருமணமாகாத அலுவலர்களுக்கு தமது தந்தை, தாய் சகோதர, சகோதரிகளுக்குச் சொந்தமான வாகனத்தையும் திருமணமான அலுவலர்களுக்கு தமது தந்தை, தாய், பிள்ளைகளின் வாகனங்களையும் பயன்படுத்தக்கொள்ள முடியும். ஆதலால் அன்றைய தினம் எடுத்துவரப்பட்ட தனிப்பட்ட வாகனம் தொடர்பான தகவல்கள் V-4 படிவத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படுமாயின் தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தனது நிரந்தர அல்லது கருதுகோளாக கருதப்படும் கடமையாற்றுகின்ற சேவை நிலையமாகக்கருதி அந்த அத்தியாயத்தின் **8.2** ந்கமைய அவர்களுக்கு பெற்றோல் வாகனமொன்றுக்காக ஒரு கிலோமீற்றருக்கு ரூ.12.00 வீதமும் டீசல் வாகனமொன்றிற்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூ.8.00 வீதமும் கொடுப்பனவு செய்ய முடியும்.

II. தனிப்பட்ட வாகனத்தை எடுத்துச்செல்கின்ற மேற்குறித்த 5.3.I உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களுக்கு வாகனத்தைச் செலுத்திய தூரத்தின் அடிப்படையில் 5.3.I குறிப்பிடப்பட்டுள்ள படிக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட படியை செலுத்த முடியும். இந்த படியை பெற்றுக் கொள்வதற்கு வாகனத்தைப் பயன்படுத்திய அலுவலர் பொது 35 வவுச்சரில் கையொப்பமிட்டு பிரயாண செலவுகள் வவுச்சருடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| அ. | சேவை நிலையம்/ கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவைநிலையம் அமையப்பெற்றுள்ள மாவட்டத்திற்குள் | ரூ. 1,500.00 |
| ஆ. | தனது நிரந்தர/ கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவைநிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கு செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கான மொத்த தூரம் 100 கிலோ மீற்றர் வரை | ரூ. 2,600.00 |
| இ. | தனது நிரந்தர/ கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவைநிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கு செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கான மொத்த தூரம் 200 கிலோ மீற்றர் வரை | ரூ. 3,400.00 |
| ஈ. | தனது நிரந்தர/ கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவைநிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கு செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கான மொத்த தூரம் 300 கிலோ மீற்றர் வரை | ரூ. 4,200.00 |

உ. தனது நிரந்தர/ கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவைநிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கு செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கான மொத்த தூரம் 400 கிலோ மீற்றர் வரை ரு. 5,000.00

ஊ. தனது நிரந்தர/ கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவைநிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கு செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கான மொத்த தூரம் 500 கிலோ மீற்றர் வரை ரு. 5,800.00

எ. தனது நிரந்தர/ கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவைநிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கு செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கான மொத்த தூரம் 600 கிலோ மீற்றர் வரை ரு. 6,600.00

ஏ. தனது நிரந்தர/ கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவைநிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கு செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கான மொத்த தூரம் 700 கிலோ மீற்றர் இற்கு மேல் ரு. 7,400.00

ஐ. தனது நிரந்தர/ கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கு செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கான மொத்த தூரம் 700 கிலோ மீற்றர் இற்கு மேல் ரு. 8,200.00

5.4. தலைமை வாக்கெண்ணும் அலுவலரொருவர், வட்டாரத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் தமது வாகனத்திற்கு தனிப்பட்ட சாரதியொருவரை அழைத்துச் செல்வதற்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவுறுத்தலுக்கிணங்க போக்குவரத்து விடயத்திற்குப் பொறுப்பாக செயலாற்றுவதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பின், அவ்வாகனங்களின் தனிப்பட்ட சாரதிகளுக்கு 5.2.II இல் குறிப்பிடப்பட்டுள்ள படிகளைக் கொடுப்பனவு செய்ய முடியும். அக்கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்காக சாரதியின் பெயரிலான வவுச்சரொன்றைத் தயரித்து V-5 படிவத்தின் (தனிப்பட்ட வாகனத்தை எடுத்துவருகின்ற சாரதியின் வரவுச் சான்றிதழ்) பிரதியொன்றோடு சமர்ப்பிக்க வேண்டுமென்பதோடு, அது சாரதி பணியாற்றிய அலுவலரின் வவுச்சரோடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தனிப்பட்ட வாகனங்களை எடுத்துச் செல்பவர்களின் சாரதிகளின் கொடுப்பனவுகள் எவையும் அலுவலரின் பெயரில் மீள்நிரப்புச் செய்யப்பட மாட்டாது. தனிப்பட்ட சாரதியின் படிக்காக சாரதியின் பெயருக்கென எழுதப்பட்ட ஒரு காசோலை மூலம் மாத்திரம் கொடுப்பனவைச் செய்தல் வேண்டும்.

5.5 இவ்வாறு தனிப்பட்ட வாகனத்தைப் பாவிப்பதற்காக கட்டணம் மைல் கூலி உரித்தான அலுவலர்களுக்கு மாத்திரமே என்பதோடு, தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் உட்பட்ட வகையில் கொடுப்பனவு செய்ய முடியும்.

5.6 I. தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட குறித்தொதுக்கப்பட்ட வாகனங்களுக்கு உரிய மாவட்டத்திற்குச் செல்வதற்கும்/ வருவதற்கும் தேவைப்பட்ட எரிபொருளுக்காக செலவிடப்பட்ட தொகையை மீள்நிரப்புச் செய்வதற்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள AV-01 படிவத்தையும் பொது 35 வவுச்சரையும் நிரப்பி அதன் பின்புறத்தில் கையொப்பமிட்டு குறித்த சிட்டையை (Bill) கொழும்பு மாவட்டத்திலிருந்து செல்லும் அலுவலர்கள் இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழுவுக்கும் ஏனைய மாவட்டங்களிலிருந்து கடமைக்கு அறிக்கைப்படுத்துகின்ற அலுவலர்கள் தமது எரிப்பொருள் செலவை மீள்நிரப்பல் செய்வதற்கு வாகனத்திற்குரிய அலுவலகம் அமையப்பெற்றுள்ள மாவட்டத்தின் தேர்தல் அலுலவகத்திற்கும் சமர்ப்பிப்பதன் ஊடாக அலுவலரின் பெயரில் அந்த செலவை மீள்நிரப்பிக் கொள்ள வேண்டும்.

II. குழாம் வாகனங்களுக்குப் பெற்றுக்கொண்ட எரிபொருள் செலவுகளை மீள்நிரப்பல் செய்வதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள PV–01 படிவத்தை பூரணப்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்து அந்த எரிபொருள் செலவுகளை குறித்த நிறுவனத்தின் பெயரில் மீள்நிரப்புச் செய்துகொள்ள வேண்டும்.

5.7 தேர்தல் கடமைக்காக தனிப்பட்ட வாகனத்தை எடுத்துச் செல்வதற்கு/ வருவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பிரயாணத்திற்காக அதிவேகப் பாதையைப் பயன்படுத்துவார்களாயின், அக்கட்டணத்தையும் மீள்நிரப்புச் செய்ய முடியும். அதற்கு உரிய நுழைவுச் சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதியை பிரயாணச் செலவு வவுச்சரோடு இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## 06. அரசாங்க சேவையாளர்களல்லாத ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்

6.1 சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களினால் சேவையிலீடுபடுத்தப்பட்ட அரசாங்க ஊழியரல்லாத அலுவலக உதவியாளர் ஒருவருக்கு வாக்கெடுப்போடு தொடர்புடைய முழுப் பணிகளுக்குமாக இங்கு 7.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக உதவியாளர் படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

6.2 அத்தகைய ஊழியரொருவருக்கு தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு நாளைக்கான ஆகக் குறைந்த இணைந்த படியாக ரூ.700.00 வீதம் உரிய நாட்களின் எண்ணிக்கைக்கமைய கொடுப்பனவு செய்ய முடியும். அவ்வாறு ஊழியரொருவரை அழைத்துச் சென்றால் அந்த சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரால் அவ்வூழியருக்குரிய தொகையைக் கொடுப்பனவு செய்துவிட்டு அதனை மீள்நிரப்புச் செய்துகொள்ள முடியும்.

6.3 உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவருக்கு தனது தேர்தல் கடமைப் பயணத்தில் அலுவலக உதவியாளரொருவரை அல்லது வேறொருவரை அழைத்துச் செல்ல அனுமதி வழங்கப்படாமையினால் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அழைத்து வரப்படுகின்ற உதவியாளருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடாது.

## 07. படிகள்

7.1 மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் எழுத்து மூலமான நியமனமொன்று வழங்கப்பட்டு தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அலுவலரொருவர்/ ஊழியரொருவர் கீழ் குறிப்பிட்டவாறான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் அதனை நிரூபிப்பாராயின் அவர்களுக்கு ஒவ்வொரு பணிக்குமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான படிகளைக் கொடுப்பனவு செய்யமுடியும்.

| பணியாட்குழு | கொடுப்பனவு செய்ய வேண்டிய படி (ரூ.) | வரவுச் சான்றிதழின் இலக்கம் |
|---|---|---|
| வட்டாரத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | 6,000.00 | CE 46 |
| சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் (வாக்கெடுப்பு நிலையம்) | 6,000.00 | CE 19/1 |
| மேலதிக சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் (வாக்கெடுப்பு நிலையம்) | 5,000.00 | CE 19/1 |
| கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள்/ எழுதுநர்கள் (வாக்கெடுப்பு நிலையம்) | 3,250.00 | CE 19 |
| அலுவலக உதவியாளர்கள் (வாக்கெடுப்பு நிலையம்) | 3,000.00 | CE 19 |

* வாக்கெடுப்பு நிலையக் கடமைகளில் ஈடுபட்ட சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு மாத்திரம் குறுஞ் செய்தி (SMS) அனுப்புவதற்காக தொடர்பாடல் கட்டணமாக ரூ. 100.00 தொகையை அவர்களுடைய வாக்கெடுப்பு நிலையப் படியுடன் சேர்த்து செலுத்த வேண்டும்.

மேலும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வட்டாரப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் வாகெண்ணல் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக்கான சேவையில் ஈடுபட்டிருந்தால் CE 50 ஆம் இலக்க வரவுச் சான்றிதழ் மூலம் அது உறுதிப்படுத்தப்பட்டால், 7.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள தலைமை வாக்கெண்ணும் அலுவலர்/ வாக்கெண்ணல் பணிகள் மேற்பார்வை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் படியைச் செலுத்த முடியும்.

7.2 வாக்குப் பெட்டிகளை விநியோகிப்பதற்காக CE 47 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமிடத்து தேர்தலுக்கு முந்திய தினம் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுக்கள் என்பவற்றை விநியோகித்த அலுவலர்களுக்கும், வாக்குப் பெட்டிகளைக் கையேற்றுக் கொண்டமைக்காக CE 48 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமிடத்து வாக்கெடுப்பு தினத்தன்று பிற்பகலில் வாக்குப்பெட்டிகளாதியவற்றை மீளக் கையேற்கும் பணியிலீடுபட்ட அலுவலர்களுக்கும் அவ்வொவ்வொரு நாள் பணிக்குமாக பின்வருமாறு கொடுப்பனவு செய்ய முடியும்.

| பணியாட்குழு | விநியோகித்தல் (ரூ.) | கையேற்றல் (ரூ.) | மேலதிக கொடுப்பனவுகள் (ரூ. ) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | 2,000.00 | 3,000.00 | 750.00 |
| சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் | 1,600.00 | 2,400.00 | 400.00 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் எழுதுநர் | 1,250.00 | 1,750.00 | 350.00 |
| கனிட்ட ஊழியர் | 1,000.00 | 1,500.00 | 300.00 |

CE 47 அல்லது CE 48 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவு சான்றிதழ் தவிர்ந்த ஏனைய படிவங்களுக்கமைய வரவுச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கின்ற அலுவலர்களுக்கு இக்கொடுப்பனவை மேற்கொள்ளக் கூடாது. விநியோகிக்கும் பணிகளை மாத்திரம் மேற்கொண்ட அலுவலர்களுக்கு இம் மேலதிக கொடுப்பனவை மேற்கொள்ளக் கூடாது. மேலதிக கொடுப்பனவானது பொருட்களாதியவற்றை தேர்தல் அலுவலர்களுக்கு கையளிக்கும் பணிக்கு மேலதிக நேரம் செலவாகியமை குறித்தே மேற்கொள்ளப்படும்.

7.3 மேலே 7.1 அல்லது 7.2 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படிகளில் ஒன்றை மாத்திரமே அலுவலரொருவருக்குக் கொடுப்பனவு செய்ய முடியும். ஆயினும் தேவையான அலுவலர்கள் போதியளவில் காணப்படாமையினால் அல்லது விஷேட சந்தர்ப்பமொன்றில் இப்பணிகளை ஆற்றிய அலுவலர் ஒருவர் வேறொரு பணியை ஆற்றியிருப்பின் அதனோடு தொடர்புடைய நியமனக் கடிதம் மற்றும் வரவுச் சான்றிதழுக்கமைய அதனோடு தொடர்புடைய கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியுமாயினும் அதற்காக அலுவலர் தேர்தல் பணிக் கடமையை ஆற்றிய மாவட்டத்தின் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் சான்றுப்படுத்தலுக்கமைய அக்கொடுப்பனவை வழங்கலாம்.

7.4 வாக்கெண்ணல் மற்றும் முடிவுகளை வெளியிடல்/ அட்டவணைப்படுத்தல் பணிகளில் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களுக்கு மேற்குறித்த 7.1 அல்லது 7.2 இல் குறிப்பிடப்பட்ட படியைக் கொடுப்பனவு செய்யக்கூடாது.

7.5 மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்து மூலம் நியமனமொன்று வழங்கப்பட்டு (வாக்கெண்ணும் அலுவலர்களுக்கான L.A.E.33 என்ற படிவத்திலான நியமனமொன்றிற்கு) வாக்கெண்ணும் கடமைகளில் ஈடுபட்ட அலுவலர் ஒருவர்/ ஊழியரொருவர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான வரவுச் சான்றிதழொன்றினூடாக அதுபற்றி நிரூபித்தால் அவர்களுக்கு ஒவ்வொரு பணிக்குமாக கீழ் குறிப்பிடப்பட்டவாறான படியினைக் கொடுப்பனவு செய்யலாம்.

| பணியாட் குழு | படி (ரு.) | வரவுச் சான்றிதழின் இலக்கம் |
|---|---|---|
| தலைமை வாக்கெண்ணும் அலுவலர்/ வாக்கெண்ணல் பணிகளை மேற்பார்வை செய்யும் வட்டார உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | 7,000.00 | CE 50 |
| வாக்கெண்ணும் அலுவலர்/ சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் | 6,000.00 | CE 54 |
| மேலதிக சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்(அஞ்சல் வாக்கு) | 6,000.00 | CE 54 |
| கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்/ எழுதுநர் | 4,000.00 | CE 49 |
| *அலுவலக ஊழியர் | 3,000.00 | CE 49 |

* சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரினால் அழைத்துவரப்படுகின்ற உதவியாளர் அல்லது அலுவலக உதவியாளருக்கு வாக்கெண்ணலுக்கான நியமனக் கடிதமாக சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரினால் வழங்கப்பட்ட கடிதம் போதுமானதென்பதோடு அது வட்டாரப் பொறுப்பு உதவி தெரிவத்தாட்சி அலுவலரினால் புறக் கையொப்பமிடப்படல் வேண்டும். சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் அழைத்துவரப்படுகின்ற உதவியாளருக்கு வாக்கெடுப்பு நிலையக் கடமைக்காக CE/19 படிவத்திலான வரவுச் சான்றிதழிலுக்குக்கூட, படியைச் செலுத்த முடியும்.

இருப்பினும், இதற்காக, சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் / வாகக்கெண்ணல் அலுவலரால் வழங்கப்படுகின்ற CE/49 ஆம் இலக்க வரவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். வாககெண்ணல் பணிக்காக CE/19 ஆம் இலக்க வரவுச் சான்றிதழுக்கு வாக்கெண்ணல் படியைக் கொடுப்பனவு செய்தல் கூடாது.

7.6 மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்து மூலமான நியமனம் செய்யப்பட்டு பெறுபேறுகளை வெளியிடல்/ அட்டவணைப்படுத்தல் கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு CE 55 என்ற சான்றிதழினூடாக நிருபிக்கப்படுமிடத்து மேற்குறித்த 7.5 இன் கீழான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு அலுவலரின்/ ஊழியரின் தேர்தல் கடமைக்கான பதவிக்கமைய மேற்குறித்த படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

7.7 மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் எழுத்துமூல நியமனமொன்று வழங்கப்பட்டு CE 52 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழொன்றினூடாக நிருபிக்கப்படுமாயின் பிரதேச ஒருங்கிணைப்பு அலுவலகமொன்றில் (வாக்கெடுப்புப் பிரிவுகள்/ பிரதேச செயலக மட்டத்தில் அமைக்கப்பட்ட அலுவலகமொன்றில்) பணியாற்றிய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்/ சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்/ கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ எழுதுநர் அல்லது அலுவலக உதவியாளருக்குக் செலுத்தப்படுகின்ற படியை அவர்கள் பணியாற்றும் தேர்தல்கள் அலுவலகத்தினூடாகக் செலுத்துமாறு பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு விஷேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

7.8. CE 53 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதலொன்றினூடாக நிருபிக்கப்படுமாயின் மாத்திரம் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணலோடு தொடர்புடைய குழுக்களில் (நலனோம்பல்/ போக்குவரத்து/ பொதுவசதிகள் போன்ற குழுக்களில்) கடமைகளுக்காக அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள பதவிக்கமைய 7.2 மற்றும் 7.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிகளை அவர் பணியாற்றிய தேர்தல் அலுவலகத்தினூடாகக் செலுத்துமாறு பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு விஷேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

7.9 CE 56 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிருபிக்கப்படுமிடத்து மாத்திரம் மண்டப ஒருங்கிணைப்புப் பணிகளில் ஈடுபட்ட பணியாட் குழுவினருக்குப் படியொன்றைக் கொடுப்பனவு செய்ய முடியும். இப்படியை அவர் சேவையாற்றிய தேர்தல் அலுவலகத்தினால் செலுத்துமாறு பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

7.10 CE 57 ஆம் இலக்க அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிருபிக்கப்படுமிடத்து மாத்திரம் ஒவ்வொரு சபைகள் மட்டத்தில் நியமனம் செய்யப்பட்ட விசேட ஒருங்கிணைப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் படியொன்றைக் கொடுப்பனவு செய்ய முடியுமென்பதோடு இப்படியை அவர் சேவையாற்றிய தேர்தல் அலுவலகத்தினால் செலுத்துமாறு பிரதி தேர்தல்கள் ஆணையாளர்களுக்குப் விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கவனிக்க :-

7.7, 7.8, 7.9 மற்றும் 7.10 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிகள் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களூடாக கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளமையால் பொது 35 வவுச்சர் ஒன்றில் அலுவலரின் பெயர் மற்றும் ஆற்றிய பணிகள் தொடர்பாகக் குறிப்பிட்டு அதன் பின்புறத்தில் கையொப்பமிட்டு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு வவுச்சர்களைக் கையளிக்குமாறு தங்களுடைய அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும். CE 52, CE 53, CE 56 மற்றும் CE 57 படிவங்களிலான வரவுச் சான்றிதழ்களோடு தொடர்புடைய படிகளை <u>தமது நிரந்தர சேவை நிலையத்தினூடாக கொடுப்பனவு செய்யக்கூடாதென்பதோடு</u> அத்தகைய கொடுப்பனவுகள் மீள்நிரப்புச் செய்யப்படமாட்டாது.

7.11 தேர்தல் ஆணைக்குழுவின்/ தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கமைய விஷேடமாகக் கையளிக்கப்பட்ட தேர்தல் கடமைகளை ஆற்றிய அலுவலர்களிருப்பின் அத்தகையவர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய படிகளுக்காக உரிய வவுச்சர்களை அவ்விஷேட கடமைகளை ஆற்றிய மாவட்டத்தின் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமையால் அதற்கமைய நடவடிக்கையெடுக்குமாறு உங்கள் அலுவலர்களை அறிவுறுத்துதல் வேண்டும்.

7.12 அரசாங்க சேவையிலீடுபட்டுள்ள சாரதிகள் தவிர்ந்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள 7.1, 7.2, 7.5 மற்றும் 7.7 ஆகிய உப பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படிகளைப்

பெற்றுக்கொள்கின்ற அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அக்காலப் பகுதிக்காக மேலதிக நேர அல்லது விடுமுறைதின சம்பளங்களைக் கொடுப்பனவு செய்தல் கூடாது.

**08.** அரசாங்க வாகனங்களின் சாரதிகளுக்கான கொடுப்பனவுகள்

8.1 தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் கோரிக்கைக்கமைய மே மாதம் 03 ஆம் திகதி முதல் மே மாதம் 09 ஆம் திகதி (அவ்விரண்டு தினங்களும் உட்பட) வரையான காலப் பகுதிக்குள் மாத்திரம் தேர்தலுடன் தொடர்புடைய கடமைகளிலீடுபடுத்தப்பட்ட வாகனங்களின் சாரதிகளுக்கு CE 51 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றினூடாக நிருபிக்கப்படுமிடத்து, அரசாங்க அலுவலகங்கள்/ நிறுவனங்களில் நிரந்தர சேவையிலுள்ள சாரதிகளின் மேலதிக நேர, பிரயாணச் செலவின மற்றும் இணைந்த படிகளை அவர்களின் நிரந்தர சேவை நிலையங்களினால் கொடுப்பனவு செய்யப்படவேண்டுமென்பதோடு, இராஜகிரியவில் அமையப்பெற்றுள்ள தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து அக்கொடுப்பனவுகளை மீள் நிரப்புச் செய்யப்படும்.

8.2 எவ்வாறாயினும் தேர்தல் கடமைகளோடு தொடர்புடைய பணியிலீடுபட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள சாரதிகளுக்கான கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்கள் அவர்கள் சேவையாற்றிய மாவட்டத்தின் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

I. <u>மே மாதம் 03 ஆம் திகதி முதல் மே மாதம் 09 ஆம் திகதி வரையிலான</u> 07 நாள் காலப் பகுதிக்குப் புறம்பான நாட்களில் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட சாரதிகளுக்கான அனைத்து கொடுப்பனவுகள்.

II. <u>மாவட்டச் செயலகங்களின் சாரதிகள் மற்றும் அம்மாவட்டச் செயலகங்களிலிருந்து சம்பளம் பெறுகின்ற ஏனைய அரசாங்க அலுவலகங்களின் சாரதிகளுக்கான கொடுப்பனவுகள்.</u>

III. <u>பிரதேச செயலகங்களின் சாரதிகள் மற்றும் அப்பிரதேச செயலகங்களிலிருந்து சம்பளம் பெறுகின்ற ஏனைய அலுவலகங்களின் சாரதிகளின் கொடுப்பனவுகள்.</u>

**மேலே 8.2 ஆம் உப பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள வகுதிக்குரித்தான சாரதிகளுக்கு தமது நிரந்தர சேவை நிலையங்களிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளக் கூடாதென்பதோடு, அத்தகைய கொடுப்பனவுகளை மீள்நிரப்பல்/ நிதி ஒதுக்கீட்மைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.**

8.3 தேர்தல் தினங்களிலும் பாதுகாப்புத் தேவை கருதி சேவையிலீடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் படிகள் மற்றும் பொலீஸ் நிலையங்களில் சேவையிலீடுபடுத்தப்பட்ட வாகனங்களின் சாரதிகளுக்கான படிகள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச் செலவினங்களைச் செலுத்தல் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலீஸ் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் மூலம் கொடுப்பனவு செய்யப்படுவதனால் தங்களால் அத்தகைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது.

8.4 தேர்தல் கடமைகளிலீடுபட்டுள்ள சாரதிகளுக்கான காத்திருத்தல் சேவைக்காக தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் உப பிரிவிற்கமைய மேலதிக நேரக் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டும்.

**09.** தேர்தல் அறிவுறுத்தல் வகுப்புக்களில் பங்குபற்றுவதற்கான கொடுப்பனவுகள்

9.1 அலுவலர்களுக்கு செலவினமின்றி கலந்துகொள்வதற்கேற்றவாறு அறிவுறுத்தல் வகுப்புக்களை நடாத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் அறிவுறுத்தல் வகுப்புக்களில் கலந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பிரயாணச் செலவுகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்ற அலுவலர்கள் அதற்காக தமது பிரயாணச் செலவு வவுச்சரை அறிவுறுத்தல் வகுப்புக்கு அழைப்பு விடுத்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தின் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அறிவுறுத்தல் வகுப்புக்கள் இராஜகிரியவில் அமையப்பெற்றுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பிற்கமைய நடாத்தப்பட்டிருப்பின் அதற்கான பிரயாணச் செலவு வவுச்சர்களை இராஜகிரிய தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக/ பிரதித் தேர்தல்கள் ஆணையாளருக்கு (நிருவாகம்) சமர்ப்பித்தல் வேண்டும்.

9.2 அறிவுறுத்தல் வகுப்புக்களுக்குச் செல்வதற்கான வாடகை வாகனக் கட்டணம் அல்லது இரவல் எடுக்கப்பட்ட வாகனங்களுக்கான பிரயாணக் கட்டணம்/ மைல் கூலி கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது. தனது தனிப்பட்ட/ வாழ்க்கைத் துணையின் வாகனத்தை

அதற்காகப் பயன்படுத்தியதாக அறிவுறுத்தல் வகுப்பை நடாத்துவதற்காக அழைப்புவிடுத்த பதவிநிலை அலுவலரினால் வழங்கப்பட்ட முறையான சான்றிதழொன்றினூடாக உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரம் தனிப்பட்ட வாகனத்திற்கான பிரயாணக் கட்டணம்/ மைல் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

9.3 அறிவுறுத்தல் வகுப்புக்களில் கலந்துகொண்ட அலுவலருக்குக் கொடுப்பனவு செய்வதற்கான நிதியை ஒதுக்கித் தருமாறு நிறுவனத் தலைவர்கள் கோரிக்கை விடுத்தல் கூடாது. அதேபோன்று அறிவுறுத்தல் வகுப்புக்களில் கலந்துகொண்டவர்களுக்குத் தமது நிரந்தர சேவை நிலையத்தினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு அந்தத் தொகையை மீள்நிரப்புச் செய்துதருமாறு கோருதல் கூடாது.

9.4 அறிவுறுத்தல் வகுப்புக்களில் கலந்துகொண்டமைக்காக பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகள் தவிர்ந்த விடுமுறை தினவச் சம்பளம் அல்லது மேலதிக நேரப் படிகள் அல்லது படிகள் எதுவும் கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது.

## 10. தமது நிரந்தர சேவை நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை மீள்நிரப்புச் செய்வதற்காக/ நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய அட்டவணைகள்.

10.1 இச்சுற்றறிக்கைக்கமைய தமது நிரந்தரசேவை நிலையங்களூடாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட அலுவலர்கள் பற்றிய விபரங்களை(சாரதிகள் தவிர்ந்த) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள "ஏ" படிவத்திற்கமைய பூரணப்படுத்தப்பட்ட அட்டவணையை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதன் மூலம் அந்தத் தொகையை மீள்நிரப்புச் செய்துகொள்ள முடியும்.

10.2 இங்கு 8.1 ஆம் உப பந்தியின்கீழ் அரசாங்க வாகனங்களின் சாரதிகளுக்கான மேலதிக நேர, பிரயாணச் செலவின மற்றும் இணைந்த படி கொடுப்பனவுகள் பற்றிய விபரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள "பி" படிவத்திற்கமைய பூரணப்படுத்தப்பட்ட அட்டவணையொன்றினூடாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதன் மூலம் அக்கொடுப்பனவினை மீள்நிரப்புச் செய்துகொள்ள முடியும்.

10.3 மேற்குறித்த அட்டவணைகளோடு கொடுப்பனவு செய்யப்பட்ட வவுச்சர்களின் மூலப் பிரதிகளை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கக்கூடாது. அவற்றைக் கொடுப்பனவு செய்த நிறுவனத்தின் கணக்காய்வுத் தேவைப்பாட்டிற்காக வைத்திருத்தல் வேண்டும்.

10.4 கொடுப்பனவு அட்டவணைகளை மாத்திரம் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு, இரட்டைக் கொடுப்பனவுகளைத் தவிர்த்துக்கொள்வதற்காக ஒரு அட்டவணையில் உள்ளடக்கிய பெயர்களை மீண்டும் மீண்டும் உள்ளடக்குதல் கூடாது. மேலும் தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கப்படுகின்ற அட்டவணைகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

10.5 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள "ஏ" மற்றும் "பி" மாதிரிப் படிவங்களுக்கமைய எதிர்பார்க்கப்படுகின்ற தகவல்கள் பூரணமாகவும் சரியாகவும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறே அலுவலர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படுகின்ற பல்வேறுபட்ட படிகளை வெவ்வேறாக சரியாக உரிய நிரல்களில் குறிக்கப்படல் வேண்டும். முழுமையற்ற அல்லது பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் வினவுவதற்கும் பிழையான தகவல்களைக் கண்டறிவதற்கும் நேரிடுவதால் அத்தகைய கொடுப்பனவுகள் தாமதமடையலாம்.

## 11. மீள்நிரப்புச் செய்வதற்கு அல்லது நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொடுத்தலுடன் தொடர்புடைய அட்டவணைகளைத் தயாரித்தல்.

11.1 வாக்கெண்ணல் பணிகளை மேற்பார்வை செய்தலானது வட்டாரத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், வாக்கெண்ணும் அலுவலர்கள், வாக்குப்பெட்டிகளை விநியோகித்தல் மற்றும் கையேற்றல், வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள், மேலதிக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், விசேட கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள், எழுதுநர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களாகப் பணியாற்றிய பணியாட் குழுவினர்களுக்கான கொடுப்பனவுகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள "ஏ" படிவத்தில் சரியாக உட்சேர்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

11.2 சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவரினால் வாக்களிப்பு நிலையப் பணிகளுக்கான அலுவலக உதவியாளராக அரசாங்க சேவையைச் சாராத உதவியாளரொருவரை சேவையிலீடுபடுத்தியுள்ள சந்தர்ப்பமொன்றில் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் பெயரிலேயே அவ்வுதவியாளரின் பிரயாணச் செலவினங்கள், இணைந்த படிகள் மற்றும் வாக்களிப்பு நிலையப் படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், அந்த சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் பெயரின் எதிரில் அவ்வுதவியாளரின் பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகள் என்பவற்றை "ஏ" படிவத்தின் 12 ஆம் நிரலில் உட்சேர்த்து தேர்தல் பணிகளுக்கான படிகளை மாத்திரம் 13 வது நிரலில் குறிப்பிடல் வேண்டும்.

11.3 தமது நிரந்தரக் கடமைக்காக வாகனமொன்று (Assigned Vechicle) ஒதுக்கப்பட்டுள்ள அலுவலரொருவர் தேர்தல் கடமைக்காக அவ்வாகனத்தை எடுத்துச் சென்றுள்ள சந்தர்ப்பங்களில் அவ்வாகனத்தை செலுத்திய அரசாங்க சேவையின் சாரதிக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளையும் "பி" படிவத்தில் குறிப்பிட வேண்டுமென்பதோடு, அச்சாரதியின் பெயரின் எதிரே 5 ஆம் நிரலில் வாகனத்தை தேர்தல் கடமைக்காக எடுத்துச் சென்ற பதவிநிலை அலுவலரின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கையிட்ட குழாம் வாகனமொன்றாயின் (Pool Vechicle) 5 ஆம் நிரல் வெற்றாக வைக்கப்படல் வேண்டும்.

| |
|---|
| கவனிக்க: இந்த சுற்றறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள "ஏ" மற்றும் "பி" படிவங்கள் மூலம் கோரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்வதற்காக ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதோடு முழுமையற்ற அல்லது இந்த சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவங்களுக்கு அப்பாற்பட்ட படிவங்களுக்காக கொடுப்பனவு செய்யப்படமாட்டாதென்பதை கருத்திற் கொள்ளவும். |

## 12. ஏனைய விடயங்கள்

12.1 அனைத்து அலுவலர்களினதும் பிரயாணச் செலவினங்கள், மேலதிக நேரப் படிகள் மற்றும் ஏனைய படிகள் வாக்கெடுப்பு தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் கொடுப்பனவு செய்யப்பட்டு நிறைவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

12.2 கொடுப்பனவு அட்டவணைகளை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு முன்னர் அதன்மூலம் கோரப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் சரியாக உட்சேர்க்கப்பட்டுள்ளனவா என பரிசீலித்துப் பார்க்குமாறும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிதித் தொகை தொடர்பான விபரங்கள் தட்டச்சிடப்பட்டதன் பின்னர் மீண்டும் அவற்றைக் கூட்டிப் பார்க்குமாறும் கேட்டுக்கொள்வதோடு, <u>அந்தப் படிவங்கள் பல பக்கங்களைக் கொண்டவையாகவிருப்பின் ஒவ்வொரு பக்கத்தின் ஈற்றிலுமுள்ள உப மொத்தம் மற்றும் அனைத்துப் பக்கங்களினதும் உப மொத்தங்களின் கூட்டுத்தொகை என்பன இறுதிப் பக்கத்தின் மொத்தத் தொகையாக இடப்பட வேண்டும்.</u> அதேபோன்று மாதிரிப் படிவத்திலுள்ளவாறு <u>அலுவலர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்காக அலுவலர்களின் பெயர்களுக்கெதிரே தொடரிலக்கத்தை</u> குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

12.3 இச்சுற்றறிக்கையில் காணப்படுகின்ற குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பணியாட்குழுவினருக்கு உரித்தான படிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர்களைத் தயார்செய்து துரிதமாக சமர்ப்பிக்குமாறு உங்களது அலுவலர்களையும், ஊழியர்களையும் அறிவூட்டுவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

12.4 மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் தேர்தல் முடிவடைந்து 30 நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்னர் இத்தேர்தல் தொடர்பான கொடுப்பனவுகளை செய்து முடிக்க வேண்டும்.

12.5 மீள்நிரப்பல்/ நிதி ஒதுக்கீட்டை குறித்தொதுக்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகள் துரிதமாக என்னிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு, அக்கோரிக்கைகளை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கோ அல்லது பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கோ அனுப்பக் கூடாது.

12.6 எரிபொருள் செலவினத்தை மீள்நிரப்புச் செய்வதற்காக உங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணைகளை (AV–01 மற்றும் PV–01 படிவம்) பரிசீலிக்கின்ற பணிகள் இவ்வாணைக்குழுவின் போக்குவரத்துப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். ஆதலால் போக்குவரத்துப் பிரிவிற்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலர் [பிரதித் தேர்தல்கள்

ஆணையாளர் (நிருவாகம்)] அவர்களுடன் தொடர்புகொண்டு உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

12.7. இத் தேர்தலுக்கான உரிய கொடுப்பனவுகள் 2025.07.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முடிக்கப்படவுள்ளமையினால் அத்தினத்திற்கு பிறகு முன்வைக்கப்படும் வேண்டுகோள்களையும் விசாரணைகளையும் நிராகரிக்கவேண்டி ஏற்படுமென தயவாய் அறியத் தருகின்றேன்.

12.8 மேற்குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் அட்டவணைகளைச் சமர்ப்பித்து மீள்நிரப்புச் செய்து கொள்ளப்படாத கொடுப்பனவுகள் தொடர்பான முழுப் பொறுப்பும் கொடுப்பனவை மேற்கொண்ட அலுவலருக்கு ஒப்படைக்கப்படுவதாகவும், உரிய திகதியன்று மீள்நிரப்புச் செய்து கொள்ளப்படாத கொடுப்பனவுகள் தொடர்பாக இந்த ஆணைக்குழு பொறுப்பை ஏற்காதெனவும் தயவன்புடன் அறியத் தருகின்றேன்.

12.9 இது தொடர்பாக மேலதிக விளக்கங்கள் அவசியமெனில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

| | |
|---|---|
| தலைமை நிதி அலுவலர் | - 0703902610 |
| தலைமைக் கணக்காளர் | - 0112866521 |
| கணக்காளர் (கொடுப்பனவுகள்) | - 0112886805 |

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க.**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
தேர்தல் ஆணைக்குழு

பிரதிகள் :-

1. கணக்காய்வாளர் தலைமை அதிபதி - தயவுடன் தகவலுக்காக
2. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு - ஆணைக்குழுவை அறிவுறுத்துவதற்காக
3. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் - பணி முற்பணத்தை விடுவித்துக் கொள்வதற்காக
4. மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) – பணி முற்பணத்தை விடுவித்துக் கொள்வதற்காக
5. தலைமை அலுவலகத்தின் பதவிநிலை அலுவலர்கள் - தயவுடன் தகவலுக்காக
6. மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் - தயவுடன் தகவலுக்காக

"ஏ படிவம்"

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,

திகதி:-

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2025.05.06

தேர்தல் கடமைக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் கொடுப்பனவுகளை மீள்நிரப்புச் செய்தல்

நிறுவனத்தின் பெயர் :- :

நிறுவனம் மத்திய அரச/ மாகாண சபை/ நியதிச் சட்ட நிறுவனங்கள் / ஏனையவை (பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும்)

நிறுவனத்தின் முகவரி :

தொலைபேசி இலக்கம் :

செலுத்திய முழுத்தொகை (ரூபா) :

** உங்களால் செலுத்தப்பட்டுள்ள தொகை Sri Lanka Interbank Payment System (SLIPS) மூலம் உங்கள் உத்தியோகபூர்வ கணக்கில் செலவு வைப்பதற்கு நடவடிக்கையெடுப்படுவதால் வங்கிக் கணக்கு தொடர்பான கணக்கு தொடர்பான பின்வரும் தகவல்களை வழங்கவும் ...

வங்கிக் கணக்கின் உத்தியோகபூர்வ பெயர்(ஆங்கிலத்தில்): :

வங்கிக் கணக்கு காணப்படும் வங்கியின் பெயர் :

வங்கி கிளையின் பெயர் :

உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு காணப்படும் வங்கியின் குறியீட்டிலக்கம் : ☐☐☐☐

உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு காணப்படும் வங்கி கிளையின் குறியீட்டு இலக்கம் : ☐☐☐

உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கின் இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

| தொடர் இலக்கம் | (01) | (02) | (03) | (04) | (05) * | (06) | (07) | (08) | (09) | (10) | (11) | (12) | (13) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | தேர்தல் படிகள் | | | அலுவலர் அழைத்து செல்லும் அரசாங்க சேவையில் இல்லாத சாரதி / அலுவலக ஊழியர் | |
| | அலுவலரின் பெயர் | நிரந்தரப் பதவி | தேர்தல் கடமையிலீடுபட்ட மாவட்டம் | தேர்தல் கடமையின்போது வகித்த பதவி | நிரந்தர அல்லது கருதுகோளாக கொள்ளப்பட்ட சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்திக்கொள்ளப்பட்ட நிலையம் வரை பயணிப்பதற்கு(ஒரு திசையில்) உள்ள தூரம்(KM) | கொடுப்பனவு செய்யப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | பிரயாண செலவு/ மைல் கூலி | இணைந்த படி | வாக்கெடுப்பு நிலையப் பணி | வாக்கெண்ணல் | விநியோகமும் கையேற்பும் | அலுவலக ஊழியர்/ சாரதிக்கான பிரயாண செலவு மற்றும் இணைந்தபடி | அலுவலக ஊழியர்/ சாரதிக்கானபடி |
| | | | | | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. | | | | | | | | | | | | | |
| 2. | | | | | | | | | | | | | |
| 3. | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | |

(05)* அலுவலர் தான் வதியும் வீட்டிலிருந்து பயணத்தை ஆரம்பிப்பாராயின் மற்றும் அந்த வீடு அவரது சேவை நிலையத்திலிருந்து 24KM தூரத்திற்குள் இருப்பின் அந்த வீடு அவருடைய கருதுகோளாகக் கொள்ளப்பட்ட கடமை நிலையமாகக்கருதி கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும். அவ்வாறில்லையெனில் பயணத்தை ஆரம்பிக்கும் இடமாக அலுவலரின் நிரந்தர சேவை நிலையத்தையே கருதப்படல் வேண்டும். சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரொருவர் அழைத்து செல்லும் அரச ஊழியர் அல்லாத ஊழியரொருவரின் கருதுகோளாகக் கொள்ளப்பட்ட சேவை நிலையமாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் நிரந்தர சேவை நிலையத்தையே கருதுதல் வேண்டும்.

தயாரித்தவர் :-

கையொப்பம் :

பெயர் :

பதவி :

கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

பரிசீலித்தவர் :-

கையொப்பம் :

பெயர் :

பதவி :

கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

மேற்படி தகவல்கள் சரியானவையென உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................................................

நிறுவனத் தலைவர்/ தலைமை நிதி அலுவலர்/ தலைமைக் கணக்காளர்/ கணக்காளர்

பெயர் :

பதவி :

பதவி முத்திரை :

"பீ. படிவம்"

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,

திகதி:-

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2025.05.06

<u>தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட அரசாங்க சேவை சார்ந்த சாரதிகளின் கொடுப்பனவை மீள்நிரப்பிக் கொள்ளல்</u>

நிறுவனத்தின் பெயர் :

நிறுவனம் மத்திய அரசு.·. மாகாண சபை .·. நியதிச் சட்ட நிறுவனங்கள்.·. ஏனையவை
(பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும்)

நிறுவனத்தின் முகவரி :

தொலைபேசி இலக்கம் :

செலுத்திய முழுத் தொகை (ரூபா) :

** உங்களால் செலுத்தப்பட்டுள்ள தொகை Sri Lanka Interbank Payment System (SLIPS) மூலம் உங்கள் உத்தியோகபூர்வ கணக்கில் செலவு வைப்பதற்கு நடவடிக்கையெடுப்படுவதால் வங்கிக் கணக்கு தொடர்பான கணக்கு தொடர்பான பின்வரும் தகவல்களை வழங்குவது கட்டாயமாகும்.

வங்கிக்கணக்கின் உத்தியோகப்பூர்வ பெயர்(ஆங்கிலத்தில்):- :

வங்கிக் கணக்கு காணப்படுகின்ற வங்கியின் பெயர் :

வங்கி கிளையின் பெயர் :

உத்தியோகப்பூர்வ வங்கிக் கணக்கு காணப்படும் வங்கியின் குறியீட்டிலக்கம் : ☐☐☐☐

உத்தியோகப்பூர்வ வங்கிக் காணப்படும் வங்கி கிளையின் குறியீட்டிலக்கம் : ☐☐☐

உத்தியோகப்பூர்வ வங்கிக் கணக்கு இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

| | (01) | (02) | (03) | (04) | (05) | (06) | (07)ழ | (08) | (09)ழ | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொடரிலக்கம் | சாரதியின் பெயர் | அடிப்படை சம்பளம் வாகனத்தின் இலக்கம் (Basic Salary) | வாகனத்தின் இலக்கம் | வாகனம் குறித்தொதுக்கப்பட்டது /குழாத்திற்குரியது என்பது பற்றி | அலுவலரொருவருக்காக குறித்தொதுக்கப்பட்ட வாகனமொன்றாயின் அவ்வலுவலரின் பெயர் | தேர்தல் கடமையிலீடுபட்ட மாவட்டம் | நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளுக்காக அறிக்கைப்படுத்திய நிலையம் வரை செல்வதற்கான(ஒருதிசையில்) குறுகிய தூரம்(முஆ) | ஈடுபடுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | மேலதிக நேரமணித்தியாலங்களின் எண்ணிக்கை | பிரயாண செலவு மற்றும் இணைந்தபடி | மேலதிக மற்றும் விடுமுறை தினச் சம்பளம் |
| | | | | | | | | | | ரு சதம் | ரு சதம் |
| 1. | | | | | | | | | | | |
| 2. | | | | | | | | | | | |
| 3. | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | |

((09)* மேலதிக் நேர மணித்தியாலங்களை கணக்கிடும் போது சாரதிகளின் வருகைச் சான்றிதழான CE51 இல் குறிப்பிடப்பட்டுள்ள மணித்தியாலங்களையும் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட நேரத்திலிருந்து நிரந்தர சேவை நிலையத்திற்கு மீண்டும் வருவதற்கு எடுக்கும் நேரத்தையும் (தூரத்தின் அளவு (KM) ற்கமைய)கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். CE51 இல் மாற்றம் ஒன்றை மேற்கொண்டிருப்பின் அதன் பிழையற்றத் தன்மையை உதவித் தெரிவத்தாட்சி அலுவலரால்(போக்குவரத்து) உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் பணியாற்றும் தினமொன்றில் கடமை நேரமான 9 மணித்தியால நேரத்தை சேவைக்காக வருகை தந்த நேரத்திலிருந்து ( ஓட்டக் குறிப்புக்களுக்கிணங்க) குறைத்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

தயாரித்தவர் :
கையொப்பம் :
பெயர் :
பதவி :
கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

பரிசீலித்தவர் :
கையொப்பம் மற்றும் திகதி :
பெயர :
பதவி :
கையடக்கத்தொலைபேசி இலக்கம் :

மேற்படி தகவல்கள் சரியனவையென உறுதிப்படுத்துகின்றேன்..

.............................................................................................................

நிறுவனத் தலைவர்.·.தலைமை நிதி அலுவலர்.·.தலைமைக் கணக்காளர்.·.கணக்காளர்

பெயர் :
பதவி :
பதவி முத்திரை :